# LAABH SAMACHAR

Volume: 09 | Issue : 11 | FEBRUARY 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE


சிட்கான் 2021

அவோ! மிளோ!! ஹொடோ!!!

# SITCON

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 13, 14 & 15 2021

**On 2021, Aug. 13, 14 & 15** (Friday, Saturday & Sunday)

**Conference** Venue @ **V.S. Chellam Century Hall A/c**

**Exhibition** Venue @ **V.S. Chellam Saraswathy Hall A/c**

## சிட்கான் தொழில் வர்த்தக மாநாடு மலர் கண்காட்சி 2021




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems




# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Uses second hand Woven bags also available

37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014





## Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி, சிட்கான் (ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு) இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13, 14 & 15 ஆகிய மூன்று நாட்கள், மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள V.S. செல்லம் சரஸ்வதி மற்றும் செஞ்சூரி ஹாலில் நடைபெற இருக்கிறது. சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் இந்த மாநாட்டின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரும் மாநாடு வெற்றி பெற ஆதரவளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விரைவில் மேற்படி அறிவுப்புகள் மற்றும் பிரவுச்சர் வெளியீடு அறிவிப்புகள் வெளியாகும்.

மத்திய பட்ஜெட் அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. அதில் சேம்பர் அளித்த கோரிக்கைகளில் சில பரிசீலிக்கப்பட்டு அறிவிப்புகளாக வெளியாகியுள்ளது. அதற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக மத்திய அரசுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது தமிழக அரசு, மொழியியல் சிறுபான்மையினருக்காக சமூக-பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்க உத்தரவிட்டுள்ளது. மொழியியல் சிறுபான்மையினர் நலனுக்காக எந்த ஒரு அரசும் தனியாக வாரியத்தை அமைத்ததில்லை. தமிழக அரசு முதன்முதலாக நடைமுறைப்படுத்தியுள்ளது. இதனால் நம் ஸௌராஷ்ட்ர சமூக மக்கள் அனைவரும் பயன்பெற முடியும். அதற்காக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், நம் ஸௌராஷ்ட்ர சமூக மக்கள் சார்பாக நன்றி தெரிவித்து தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**நுனிக்கொம்பர் ஏறினார் அ∴திறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி யாகி விடும்.**

ஸௌராஷ்ட்ர மொழியில்: உஞ்சகொம்மர் ஹிங்கெ ்த்தென் மிஞ்சி கரன்யத்தன்
அந்த்யம் அவ்ஜீவுகு

**பொருள்:** (மேலும் அளவறியாமல் செய்வது எதைப்போல் என்றால்) ஒரு மரத்தின் நுனிக்கொம்பின் உச்சிக்குப் போய் விட்டவன் அதற்கு மேலும் ஏற முயன்றால் உயிருக்கே முடிவு வந்துவிடும்.

அதிகாரம் 48 | வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) | அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**- K.K. தினேஷ்**

**26.01.2021** - பாரத தேசத்தின் 72ம் ஆண்டு குடியரசு தின விழா சேம்பர்-ல் கொண்டாடப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக Dr. S.N. கார்த்திக், Sr. Consultant, Neurologist, Apollo Hospitals, Mdu. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

**26.01.2021** - காலை 11 மணி அளவில் நமது சேம்பர்-ன் 6வது செயற்குழு கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் சிட்கான் 2021 மாநாட்டின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

**30.01.2021** - பா.ஜ.க. கட்சித் தலைவர் திரு. ஜே.பி. நட்டா அவர்களை நமது சேம்பர் முன்னாள் தலைவர்கள் நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

**30.01.2021** - சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் B.S.N. Bags உரிமையாளர் திரு. V.J. பாஸ்கர். அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**03.02.2021** - சேம்பர் ஆயுட்கால் உறுப்பினர் ஏசியன் எண்டர்பிரைசஸ் உரிமையாளர் திரு. A.T. சங்கர் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**09.02.2021** - மத்திய பட்ஜெட் 2021 மற்றும் ஜி.எஸ்.டி. பற்றிய நிகழ்ச்சி சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இது குறித்து விளக்கமளிக்க CA. J. பால சுப்பிரமணியன் மற்றும் CA. G. சரவணக்குமார் Chartered Accountants, Partners, M/s. B.S.L.S. and Associates, Mdu. ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாடினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**- B.S. ஜெனார்த்தனன்**

ஸெளராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு - சிட்கான் 2021 இந்த ஆண்டு நடைபெற இருக்கிறது. இதுவரை ஐந்து முறை சிட்கான் மாநாடு நடைபெற்றுள்ளது. இது ஆறாவது முறையாக நடைபெறும் சிட்கான் மாநாடு. சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமையில் இந்த மாநாடு நடைபெற இருக்கிறது.

சிட்கான் மாநாடு எந்த அளவிற்கு அங்கத்தினர்களுக்கு பயன்தரும் வகையில் நடத்தப்படுகிறது என்பதை தாங்கள் அனைவரும் அறிந்ததே. மாநாட்டில் தொழில் வர்த்தக கண்காட்சி மற்றும் மலர் வெளியீடு சிறப்பம்சம் மிக்கது. கண்காட்சியில் ஸ்டால் அமைத்த பலர் பயன்பெற்றதாக இதுவரை நடைபெற்ற மாநாட்டில் பங்குகொண்டவர்களின் கருத்தாகத் தெரிவித்துள்ளனர். அதோடு, ஒவ்வொரு முறையும் பல்வேறு தகவல்கள் கொண்ட மலர் வெளியீடு செய்யப்படுகிறது. மலரை படித்த பலர் இன்றளவும் அதனை பொக்கிஷமாக பாதுகாத்தும் வருகின்றனர்.

மாநாட்டில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் நடத்தப்படும் மாநாட்டிற்கு தங்களின் ஆதரவு என்றும் அவசியம் தேவை. நன்றி.


## தலைவர்கள் சந்திப்பு

நமது ஸெளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகளை, பல்வேறு கட்சித் தலைவர் மரியாதை நிமித்தமாக சந்திக்கும் ஆர்வத்தை தெரிவித்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் மூன்று தலைவர்கள் நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்துள்ளனர். அதன்படி,

**22.01.2021** அன்று, பாரதிய ஜனதா காட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் திரு. C.T. ரவி மற்றும் நிர்வாகிகளை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.

**30.01.2021** அன்று, பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ நட்டா அவர்களை நமது சேம்பர் முன்னாள் தலைவர் நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

**09.02.2021** அன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி. கனிமொழி அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள், ஸெளராஷ்ட்ர சமூக பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் நேரில் சந்தித்தனர்.



O.V.K. பாஸ்கரன்

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...

TRC
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்


V.K. ஜெயசங்கர்

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



# 72வது குடியரசு தின நிகழ்ச்சி





SCC PROGRAM

பாரத தேசத்தின் 72வது குடியரசு தினம் 26.01.2021 அன்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் வளாகத்தில் தேசியக் கொடியேற்றி கொண்டாடப்பட்டது. காலை சரியாக 8.30 மணி அளவில் சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்களால் தேசியக் கொடியை ஏற்றி, நாட்டுப்பண் பாடப்பட்டப்பின், விழாவிற்கு கலந்து கொண்ட சேம்பர் நிர்வாகிகள், அங்கத்தினர்கள் அனைவருக்கும் அறுசுவை காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

சரியாக காலை 9.30 மணிக்கு குடியரசு தின சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக Dr. S.N. **கார்த்திக்** Sr. Consultant, Neurologist, Apollo Hospitals, Mdu. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

சிறப்பு விருந்தினர் Dr. S.N. **கார்த்திக்** அவர்களை சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.M. **ருபேஷ் பாபு** அவர்கள் அறிமுகம் செய்தார்.

சிறப்பு விருந்தினர் Dr. S.N. **கார்த்திக்** அவர்கள் பேசுகையில், இன்று மக்களிடம் குறிப்பாக நம் சமூகத்தவர்களிடம் உடல் நலம் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாக உள்ளது. அதற்கென்ன நலமாக தானே இருக்கிறோம் என்று நினைத்தால், அதற்கு காரணம் நம்மிடம் இருக்கும் நம் முன்னோர்கள் ஜீன்கள் தான். ஆனால், அதே ஜீன் அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து நல்லது செய்யுமா என்றால் சந்தேகம் தான். ஏனென்றால் நாம் உண்ணும் உணவு பழக்கம் மாறிவிட்டது. குறிப்பாக, சாலையோர துரித உணவுகளை உண்ணுவதால் நம் உடம்பின் சீரான இயக்கம் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்றார்.

புலால் உண்பது தவறல்ல, அதை அளவுக்கு அதிகமாக உட்கொள்ளும்போது நம் உடல் இயக்கம் மாறுகிறது என்றார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்கள் சந்தேகங்களை கேட்டனர். மிக அழகாக எளிமையாக அனைத்து கேள்விகளுக்கு பதிலளித்து தமது உரையை நிறைவு செய்தார்.

அவரைத் தொடர்ந்து, கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள மாஸ்க் அணிவது பற்றிய விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த கோழிக்கோடு, நிரஞ்சன் குழுமத்தின் தலைவர் திரு. K.R.M. **நிரஞ்சன் குமார்** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவர், மாஸ்க்-ன் நன்மைகள், மாஸ்க்-ல் உள்ள பாதுகாப்பு அம்சங்களை எடுத்துரைத்தார். அனைவருக்கும் பயனுள்ள தகவலாகவும், மாஸ்க்-ன் அவசியம் குறித்தும் தெரிந்துகொண்டனர்.

கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட Dr. S.N. **கார்த்திக்** மற்றும் திரு K.R.M. **நிரஞ்சன் குமார்** ஆகியோருக்கு நமது சேம்பர் நினைவுப்பரிசு மற்றும் பொன்னாடை அணிவித்து கௌரவித்தது. இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*


A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633




https://youtu.be/-JMVniVMLr0


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

https://fb.watch/3LigoPanOM/




# மத்திய பட்ஜெட் 2021-22 மற்றும் ஜி.எஸ்.டி. - புதிய மாற்றங்கள்

வழக்கமாக பிரதி மாதம் முதல் செவ்வாய்க்கிழமை அன்று தவறாமல் நமது சேம்பர் தொழில் கூட்டங்களை ஏற்பாடு செய்து வருகிறது. இந்த முறை பட்ஜெட் அறிவிப்புகளுக்காக இரண்டாம் செவ்வாய்க்கிழமை அன்று நடத்த வேண்டியதாயிற்று.

கடந்த 01.02.2021 அன்று மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் இந்திய பாராளுமன்றத்தில் மத்திய பட்ஜெட்-ஐ தாக்கல் செய்திருந்தார். அதுகுறித்த சிறப்பு விளக்கக்கூட்டம் நடத்துவதற்கு 09.02.2021 அன்று மாலை சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மத்திய பட்ஜெட் மற்றும் ஜி.எஸ்.டி -யில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய மாற்றங்கள் குறித்து விளக்கமளிக்க Ca. J. **பால சுப்பிரமணியன்** & Ca.G. **சரவணக்குமார்** Chartered Accountants, Partners, BSLS and Associates, Madurai ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.

சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் இந்தக்கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினர்களை இணைச்செயலாளர் திரு. J.S. **சாயிஜீவன்** மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. T.K. **சிவநாத்பாபு** ஆகியோர் மிக அழகாக அறிமுகம் செய்தனர்.

முதலில், பட்ஜெட் குறித்து விளக்கமளிக்க Ca. G. **சரவணக்குமார்** அவர்கள் பேச அழைக்கப்பட்டார். அவர் கூறுகையில், பட்ஜெட்டிற்கு முன்பு கொரோனா காரணமாக கூடுதல் வரி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவ்வாறு எந்த ஒரு கூடுதல் வரி எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி என்று கூறி மேற்படி தகவல்களை அளித்தார்.

வருமான வரி பொருத்தவரையில், 75 வயதிற்கு மேற்பட்டவர்கள் ரிட்டர்ன் தாக்கல் செய்யத் தேவையில்லை என்று கூறப்படுகிறது. உண்மையில், 75 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அல்ல, 75 வயதிற்கு மேற்பட்ட இரண்டு பிரிவினர்களுக்கு மட்டும் தான் அது பொருந்தும். அவர்கள், பென்ஷன் மற்றும் குறிப்பிட்ட வங்கியில் வட்டியை (Pension and Interest from Specified Bank) பெறும் நபர்களாக இருக்க வேண்டும். அதிலும், பென்ஷன் மற்றும் வட்டி வருவாய் ஒரே வங்கியில் பெறுபவராக இருக்க வேண்டும் என்று கூறினார்.

சம்பளதாரர்களுக்கு எல்.டி.சி. (LTC - Leave Travel Concession)-க்கு வரி கட்டத்தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதோடு பி.எஃப் தொகை 2.5 லட்சத்திற்கு மேலாக பங்களிப்பு இருந்தால் அதற்கு விலக்கு கிடையாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அதனையடுத்து, தொழில் துறையினர்களுக்கு, இ.எஸ்.ஐ., மற்றும் பி.எஃப் பங்களிப்பு தொகை செலுத்தும் காலம் தவறாமை. தவறினால் அதிகாரிகளால் விதிக்கப்படும் அபராதம், வருமானத்தை குறைத்து அல்லது கூடுதல் செலவினங்களை காண்பித்தல் மற்றும் Fake Invoice கொண்டு Input Tax Credit எடுத்தல் போன்ற செயல்களை அதிகாரிகள் கண்டுபிடித்தால் கைது நடவடிக்கை செய்தல், சர்வீஸ் துறையினர்களுக்கான TDS பிடித்தத்தில்-ல் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றம், TDS போன்று கொள்முதல் செய்வதற்கு கொண்டு வரப்பட்டுள்ள TCS எனும் புதிய முறை, வருடத்திற்கு ரூபாய் ஐம்பது லட்சத்திற்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு (Small Tax Payers) புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள DRM எனும் புதிய விதிமுறை, Transaction Scrutiny என பல்வேறு தகவல்களைத் தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.



# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

## வீட்டு உபயோகப் பொருட்கள்

18-ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை – 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை – 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள்**
**மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**

* பினாயில் காம்பவுண்ட்
* டாய்லட் கிளினர்
* சோப் ஆயில்
* வாஷிங் லிக்யூட்
* டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
* தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
* பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
* ஹாண்ட் வாஷ் லிக்யூட்
* ஆசிட் சிலர்ரி
* பிளிச்சிங் பவுடர்
* வாஷிங் சோடா
* காஸ்டிக் சோடா
* டிஸ்டில்டு வாட்டர்
* வாஷிங் பவுடர் செட்
* டிடர்ஜண்ட் பவுடர்
* ஒயிட் பினாயில்
* டிஸ்வாஸ் கேக்
* டிடர்ஜண்ட் சோப்ஸ்
* ஓம வாட்டர்
* டினோ பால்
* பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813






அவரைத் தொடர்ந்து Ca. J. **பால சுப்பிரமணியன்** அவர்கள் பேசுகையில்,

மத்திய அரசு ஜி.எஸ்.டி வரிச் சட்டத்தை இந்தியாவில் அமல்படுத்தி இந்தளவிற்கு செயல்படுத்தி வருவது மிகவும் சவலானது. ஜி.எஸ்.டி அமல்படுத்திய நாளிலிருந்து இன்றளவும் இந்த சவாலை நமது மத்திய அரசு சந்தித்துக்கொண்டு வருகிறது, அதன்மூலம் புதிய புதிய திருத்தங்களைத் தொடர்ந்து கொண்டு வருகிறது. ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் தான் பெரும்பாலான மாற்றங்கள் அறிவிக்கப்படுகின்றன. அதையும் தாண்டி பட்ஜெட்டின் போது சில மாற்றங்கள் அறிவிக்கப்படுகிறது. அதில் சில விஷயங்களை நாம் பார்போம் என்று துவக்கினார்.

அதன்படி முதலில், ITC (உள்ளீட்டு வரி)-யில் நான்கு விதமான (Conditions) கட்டளைகள் கொண்டு வந்துள்ளது. அதில் முதலாவது, ITC எடுக்கும் பொருள் தொழில் சார்ந்ததாக இருக்க வேண்டும். இரண்டாவது, கொள்முதல் செய்யும் நபரிடமிருந்து பெறப்படும் Tax Invoice-ஐ ரிட்டன் தாக்கல் செய்யும் நாளிலிருந்து 72 மாதங்கள் வரை கையில் அவசியம் வைத்திருக்க வேண்டும், மூன்றாவது, சரக்கு மற்றும் சேவையை பெற்றிருந்தால் மட்டுமே ITC எடுக்க வேண்டும், அத்துடன், சரக்கு யாரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டதோ அவர் அனுப்பிய இ-வே பில் ரசீதையும் வைத்துக்கொள்வது அவசியம். இதனால், Fake Invoice தவிர்க்கப்படும். நான்காவதாக, சரக்கு யாரிடமிருந்து பெறப்பட்டதோ, அந்த சப்ளையர் விற்பனை செய்யப்பட்ட பொருள் விபரத்தை தாக்கல் செய்து ஜி.எஸ்.டி.ஆர் - 1 ல் காண்பிக்கப்பட்டால் மட்டுமே நாம் ITC எடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

அடுத்ததாக, With-Payment மூலம் போலியான ஏற்றுமதியாளர்கள் பலர், Refund பெறுவதை அறிந்து, அரசு, குறிப்பிட்ட சில சரக்கு ஏற்றுமதிகளுக்கு மட்டுமே இனி With Payment ஜி.எஸ்.டி-க்கு Refund அளிக்கப்படும் என்று கூறியுள்ளது. அது எந்த மாதிரியான சரக்குகளுக்கு என்று இனிதான் அறிவிப்பு வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் ரிட்டர்ன் தாக்கல் செய்வதை தவிர்க்க மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ரிட்டர்ன் தாக்கல் செய்ய விரும்புவோருக்காக புதிய முறை கொண்டுவந்துள்ளது. இதில், விருப்பம் உள்ளவர்கள் மாறலாம். கட்டாயம் அல்ல. மாதா மாதம் ரிட்டர்ன் தாக்கல் செய்ய விரும்புவோர் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்யலாம் என்ற கூடுதல் தகவலைத் தெரிவித்தார்.

அடுத்ததாக, இரண்டு மாதத்திற்கு ஜி.எஸ்.டி.ஆர்-3B கட்டத்தவறினால் அடுத்த மாதத்தில் ஜி.எஸ்.டி.ஆர்-1 தாக்கல் செய்ய இயலாது; RC Suspend செய்யப்பட்டிருக்கும் சமயத்தில் விற்பனை செய்யக்கூடாது; வரியை தாமதமாக கட்டும்போது அதற்கான வட்டி 18%-ஐ கிராஸ் டாக்ஸிலிருந்து கணக்கிடாமல், ITC-ஐ கழித்து வரும் தொகையிலிருந்து வட்டி கணக்கிட்டு செலுத்தினால் போதும், இது 01.07.21 முதல் நடைமுறைக்கு வருகிறது போன்ற தகவல்களுடன், Rule 86B-ல் கூறப்பட்டுள்ள விபரங்கள், இ-வே பில்-ல் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள் போன்ற தகவல்கள் இந்த பட்ஜெட்-ல் கூறப்பட்டுள்ளதாக தெரிவித்து தமது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்திற்கு கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்கள் சந்தேகங்களுக்கு விடையை கேட்டறிந்தனர். மிக அருமையாக அதற்கான விளக்கத்தையும் சிறப்பு விருந்தினர்கள் அளித்தனர்.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக, சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட Ca. J. **பால சுப்பிரமணியன்** மற்றும் Ca. G. **சரவணக்குமார்** ஆகியோருக்கு நினைவுப் பரிசு மற்றும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

UIN No. Applied
MFG. No. 8/25 D
பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க
PLASMODIN CAPSULES 500 mg.
Increase Immunity Power

Prop. : B.K.D. Suresh
4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

# மத்திய பட்ஜெட்-ல்

## சேம்பரின் கோரிக்கைகளுக்கு அறிவிப்பு

2021-22 மத்திய பட்ஜெட்-ல் தொழில் துறையினர்களின் எதிர்பார்ப்புகளை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், அங்கத்தினர்கள் மற்றும் நிர்வாகிகளிடமிருந்து கேட்டறிந்து, அதற்கு Pre-Budget Memoranudm தயாரித்து மத்திய நிதி அமைச்சகத்திற்கு அனுப்பியிருந்தது. அதில் சில கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, கடந்த 01.02.2021 அன்று நடைபெற்ற மத்திய பட்ஜெட்-ல் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்புகளை கீழே காணலாம்.

- எங்களின் RC Cancellation கோரிக்கையை ஏற்று "தகுந்த முகாந்திரம் இன்றி Cancel ஆகாது" என்ற கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.
- Cash Ledger-ல் நாம் நம்முடைய Tax கட்டும்பொழுது (Net Liability) நிகர நிலுவைக்கு மாத்திரம் வட்டி வசூலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- வீட்டுக்கடன் / வீடு அடமானக் கடன் வட்டி மற்றும் மூலதனம் தள்ளுபடிகள் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதர சலுகைகளில், எல்.டி.சி. தொகைக்கு வரி விலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சேம்பரின் பல்வேறு கோரிக்கைகளில், மேற்படி சில வேண்டுகோள்களுக்கு அரசு கவனம் செலுத்தி பட்ஜெட்-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. எங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு திருத்தியமைத்ததற்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

### வளர்ச்சி திட்டங்களுடன் பட்ஜெட்

நாட்டை வளர்ச்சியடைய செய்யும் திட்டங்கள் பட்ஜெட்டில் உள்ளன. தமிழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு, வருமான வரி விகிதம் குறைப்பு, ஓய்வூதியம் பெறும் 75 வயதினருக்கு வரி விலக்கு அறிவிப்புகளை வரவேற்கிறோம். புதிய நிறுவனங்களில் முதலீடு செய்யும் முதலீடு வருவாய் மீதான வரி விலக்கு அடுத்த ஆண்டும் நீட்டிப்பதால் புதிய தொழில் முனைவோர் உற்சாகம் அடைவர். அரசின் முக்கிய திட்டங்கள், அறிவிப்புகள் மாநில மொழிகளில் மொழி பெயர்ப்பு திட்டம் அருமை. தனி நபர் வருமான வரி விலக்கு அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றம். கொரோனா கால பொருளாதார நெருக்கடியை பட்ஜெட் மூலம் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.



– குமரன் பி. ஜாகுவா
தலைவர், சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்கம்.

தினமலர் -02.02.2021

சௌராஷ்டிர தொழில் வர்த்தக சங்கத் தலைவர் குமரன் பி.ஜகுவா:



இந்தியாவை அடுத்தக் கட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்ல அனைத்து அடிப்படைத் திட்டங்களையும் கொண்டதாக மத்திய நிதிநிலை அறிக்கை உள்ளது. உள்கட்டமைப்பு மற்றும் சுகாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய சாலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்புக்குரியது. தொழில் துறையினர் பயன்பெறும் வகையில் எந்த அறிவிப்பும் இல்லை. இருப்பினும், புதிதாக தொடங்கப்படும் நிறுவனங்களில் முதலீடு வருவாய் மீதான வரி விலக்கு நீட்டிக்கப்பட்டிருப்பது புதிய தொழில்முனைவோருக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும்.

தினமணி -02.02.2021

### சேம்பரின் பார்வையில்

## பட்ஜெட் 2021-22

நமது பாரத தேசத்தை அடுத்த கட்ட வளர்ச்சிக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான அனைத்து அடிப்படை திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான பட்ஜெட் ஆக விளங்குகிறது. (உட்கட்டமைப்பு மற்றும் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது). இதில், தமிழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு, தனி நபர் வருமான வரி விலக்கு அறிவிப்புகள் இல்லாதது வருத்தம். 75 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வருமான வரி சமர்ப்பிபதிலிருந்து விலக்கு அளித்துள்ளது வரவேற்கத்தக்கது. தொழில் துறையினர் பயன்பெரும் வகையில் எந்த அறிவிப்புகளும் இல்லை. கம்பெனிகள், பங்குதாரர்களுக்கு அளிக்கும் டிவிடென்ட் டிஸ்சார்ஜ் மீதான வரி விலக்கு பயனளிக்கக்கூடியதாக உள்ளது. அதோடு, புதிதாக தொடங்கப்படும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் முதலீட்டு வருவாய் மீதான வரி விலக்கு அடுத்த ஆண்டும் நீட்டிக்கப்படுவதால் புதிய தொழில் முனைவோர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும். அரசின் முக்கிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளை அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்ப்பு செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்துவது அனைத்து தரப்பு வெகுஜன மக்களையும் மத்திய அரசின் திட்டங்கள் சரியான வகையில் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். சாலையோர வியாபாரிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டம் விரிவாக்கம் வரவேற்கத்தக்கது. மதுரை – கொல்லம் நவீன நான்கு வழிச்சாலை அனுமதி தொழில் துறையினர்கள் போக்குவரத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்.

Prop. M.S. Divyarani

HerboCare

Fly Leakage Free

Herbal Sanitary Napkins

ஹெர்பல் சானிட்டரி நாப்கின்ஸ்



Customer Care: 99441 66722, 99447 95767

மாதவிடாய் குறைபாடுகளில் இருந்து குணமடைய எங்கள் ஹெர்போகேர் ஹெர்பல் சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்துங்கள்

L, XL, XXL அளவுகளில் கிடைக்கிறது

Mfrd. By
Sanghath Health Care
42, South Masi Street,
Madurai - 625001
email: herbocareproducts@gmail.com

அவோ! மிளோ!! ஹெறாடோ!!!

# SITCON

## SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

**August 13, 14 & 15 2021**

**On 2021, Aug. 13, 14 & 15** (Friday, Saturday & Sunday)

**Conference** Venue @ **V.S. Chellam Century Hall A/c**

**Exhibition** Venue @ **V.S. Chellam Saraswathy Hall A/c**

நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் லாப் ஸமாச்சார் ஜனவரி மாத இதழில் மொழியியல் சிறுபான்மையினர் நிலைமைகளை மேம்படுத்த தமிழகம் புதிய நிறுவனத்தை அமைக்கிறது என்கிற தலைப்பிலான செய்தி வெளியானது. கடந்த மாதம் வரை அறிவிப்பாக இருந்தது தற்போது தமிழக அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ள செய்தி அறிந்து நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சௌராஷ்ட்ர மக்களின் சார்பாக தமிழக அரசு மற்றும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தும், பாராட்டியும் கடிதம் அனுப்பியுள்ளது. அதில், சௌராஷ்ட்ர மொழியியல் சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் தலைவரை நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த செய்தி நாளிதழ்களில் வெளியாகியுள்ளது. மொழியியல் சிறுபான்மையினர் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு படும் சிரமத்திற்கு அரசு ஏற்படுத்தியுள்ள இந்த அமைப்பு நமக்கு உறுதுணையாக இருக்கும். தனிநபர் அல்லது குழுக்கள், கடன்கள் மற்றும் அட்வான்ஸ் மூலம் உதவப்படும் மைக்ரோ ஃபைனான்ஸ், விரும்பும் மொழியில் கல்வி, வேலை வாய்ப்பு, வணிகம் போன்ற சிறுபான்மை மொழியினருக்கு இந்த அமைப்பின் மூலம் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆகவே நம் சிறுபான்மை மொழியினர் அனைவருக்கும் இது மிகப்பெரிய வரப்பிரசாதம்.

### மொழி சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தில் சௌராஷ்டிர வர்த்தக சபைக்கு பிரதிநிதித்துவம் வழங்கக் கோரிக்கை

மதுரை, பிப்.12: மொழி சிறுபான்மையினருக்கான மேம்பாட்டுக் கழகத்தில் சௌராஷ்டிரா வர்த்தக சபைக்கு பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை தலைவர் குமரன் பி.ஜகுவா, தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதம்: தமிழகத்தில் வசிக்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது மற்றும் சௌராஷ்டிரா உள்ளிட்ட மொழி பேசக் கூடியவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கும் அவர்களது பிரச்னைகளைக் கண்டறிந்து தீர்வு காணவும் மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டுள்ளதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிதாக உருவாக்கப்படும் சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் சௌராஷ்டிரா சமூகத்தினரின் பிரதிநிதியாக, சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை தலைவருக்கு பிரதிநிதித்துவம் வழங்க உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தினமணி - 13:02:2021

### முதல்வருக்கு பாராட்டு

மதுரை, பிப். 13 – தமிழ்நாடு மொழியியல் சிறுபான்மையினர் சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டு கழகம் உருவாக்க உத்தரவிட்ட தமிழக அரசு மற்றும் முதல்வர் பழனிசாமிக்கு மதுரை சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் குமரன் பி.ஜகுவா கூறியதாவது: தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, சவுராஷ்டிரா மொழி பேசுவோர் மாநிலத்தின் முக்கிய சிறுபான்மையினர் ஆவர். இவர்கள் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு பல பிரச்னைகளை சந்திக்கின்றனர். இது குறித்த எங்கள் கோரிக்கையை பரிசீலித்து மொழியியல் சிறுபான்மையினரை மேம்படுத்த, அரசு சேவைகளை அணுக தமிழ்நாடு மொழியியல் சிறுபான்மையினர் சமூகம், பொருளாதார மேம்பாட்டு கழகம் உருவாக்க உத்தரவிட்டதற்கு முதல்வருக்கு நன்றி, என்றார்.

தினமலர் - 13.02.2021

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**



# மாற்றம்
## இப்போது இல்லையென்றால் எப்போது?

கடந்த ஐம்பதாண்டுகால உலக வரலாற்றின் அரசியல், பொருளாதார நிகழ்வுகளைத் தீர்மானித்ததில் கச்சா எண்ணெயின் பங்கு முதன்மையானது. கச்சா எண்ணெய்யை மையப்படுத்தி பல அரசியல் பேரங்கள் நடந்துள்ளன; விமானம், கப்பல், கார் என அனைத்து விதமான போக்குவரத்தும் முதன்மையாக பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கிவந்தன. தற்போது இந்தச் சூழல் பெரும் மாற்றத்துக்கு உள்ளாகி வருகிறது.

நிலக்கரி, பெட்ரோல், டீசல் போன்ற புதைபடிவ எரிபொருள்களின் அதிதீவிரப் பயன்பாடு கரியமில வாயு வெளியேற்றத்தின் கட்டுப்பாடுகளை மீறிச் சென்றுவிட்ட நிலையில் புவியின் சராசரி வெப்பநிலை அதிகரிப்பு, கடல்மட்ட உயர்வு, புயல், வெள்ளம் என காலநிலையில் பெரும் மாற்றங்கள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் புவியின் வெப்பநிலை அதிகரிப்பதை தடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

விளைவாக, தற்போது உலகம் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டிலிருந்து மாற்று ஆற்றலை நோக்கி நகர்ந்தாக வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறது. சூரிய ஆற்றல், காற்றாலை என மாற்று எரிசக்தி உருவாக்கத் தொழில் நுட்பங்களில் உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ளது.

தொழில்புரட்சிக்கு முன்பு வரை எரிசக்திக்கான தேவை பெரிய அளவில் இல்லை. விலங்குகளைக் கொண்டு மனிதர்கள் தங்களுக்கான வேலைகளைச் செய்து கொண்டனர். நீராவி இயந்திரம் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, தொழில்புரட்சியின் விளைவாக உருவான தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறிய கரியமில வாயு உள்ளிட்ட பசுங்குடில் வாயுக்கள் புவியின் வளிமண்டலத்தில் அதிகரிக்கத் தொடங்கின.

தொழிற்சாலைகள், வாகனங்கள் அதிகரிக்க அதிகரிக்க கரியமில வாயு வெளியேற்றத்தின் அளவும் தொடர்ந்து அதிகரித்தது. நிர்ணயிக்கப்பட்ட அளவையும் தாண்டிவிட்ட கரியமில வாயு வெளியேற்றம் தற்காலத்தில் காலநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது தொடர்ந்தால் உலகின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அளவை விரைவில் எட்டும்; மேலும் இது கட்டுப்படுத்தப்படாவிடில் இந்நூற்றாண்டின் இறுதிக்குள் புவியின் சராசரி வெப்பநிலை 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும்; நன்னீர் பற்றாக்குறை ஏற்படும்; வெப்ப அலை தீவிரமடையும்; வெள்ளம், புயல்கள் தொடர்ச்சியாக ஏற்படும். இந்நிலையில் இனியும் நாம் காலநிலை மாற்றத்தை தீவிரமாக அணுகாவிட்டால் உலகம் மிகப் பெரிய பேரழிவைச் சந்திக்கும் என்று அறிவியலாளர்கள் எச்சரித்து வந்ததன் தொடர்ச்சியாக 2015-ம் ஆண்டு பாரீஸில் காலநிலை தொடர்பாக 195 நாடுகள் இணைந்து ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன.

புவியின் வெப்பநிலையை 2 டிகிரி செல்சியஸுக்கு குறைவாக வைத்திருக்க வேண்டும் என்று உறுதி ஏற்றுள்ளன. தற்போது நடந்து முடிந்த அமெரிக்கத் தேர்தலில் கார்பன் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது தேர்தல் உறுதிமொழிகளில் முக்கியமானது. தேர்தலில் வென்று அமெரிக்காவின் புதிய அதிகாரப் பதவியேற்கவிருக்கும் ஜோ பைடன் 2050-ம் ஆண்டுக்குள் அமெரிக்காவை கார்பன் வெளியேற்றம் இல்லாத நாடாக மாற்றுவது என்பதை தேர்தல்


சத்குரு ஸரணம் சரணம்

K.D. பத்மினி
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ※ வரவேற்பு அமைப்பாளர்

98946 71401 99426 71819
63819 26819 90255 17366

# பத்மினி ஈவன்ட்ஸ்

★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)

மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.

5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.

உறுதிமொழியாக அறிவித்தார். ஏனைய உலக நாடுகளும் அடுத்த முப்பது ஆண்டுகளில் கார்பன் வெளியேற்றத்தை பூஜ்ஜியமாக்க இலக்கு நிர்ணயித்துள்ளன. இவ்வாறாக கச்சா எண்ணெயிலிருந்து பசுமை ஆற்றலை நோக்கிய பயணம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியிருக்கிறது.

மாற்றம் புதிதல்ல: கடந்த நானூறு ஆண்டு காலகட்டத்தில் எரிஆற்றல் பயன்பாடு சூழலுக்கு ஏற்ப மாற்றம் அடைந்தே வந்திருக்கிறது. தொழில்புரட்சியின் ஆரம்ப காலம் வரையில் விறகுகளே முதன்மையான எரிபொருள்களாக இருந்தன. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருகவும் எரிபொருளுக்கான தேவை அதிகரித்தது. விறகுகளைக் கொண்டு அதை ஈடுகட்டமுடியாத நிலையில், உலகம் நிலக்கரியை நோக்கி நகர்ந்தது. அதன்பிறகு தொழிற்சலைகள், போக்குவரத்துகள் புதிய பரிணாமம் எடுக்கவும் அதற்கேற்ற எரிஆற்றல் தேவைப்பட்டது. விளைவாக, பெட்ரோல், டீசல் பயன்பாட்டுக்கு வந்தன.

மேற்கூறிய மாற்றங்களும் நாம் தற்போது எதிர்கொண்டு வரும் மாற்றத்துக்கும் முக்கியமான வேறுபாடு ஒன்று இருக்கிறது. முந்தைய மாற்றங்கள் அனைத்தும், மூலப் பொருள்கள் தீர்ந்து போவதை ஒட்டி நிகழ்ந்தவை. ஆனால் தற்போதைய நிகழ்வு, கச்சா எண்ணெய் தீர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கும் மேலாக, காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை காரணமாகக் கொண்டு நிகழ்கிறது.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டிலிருந்து பசுமை ஆற்றலை நோக்கிய தற்போதைய மாற்றம் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, அரசியல் ஆதிக்க ரீதியாகவும் பெரும் மாறுதல்களைக் கொண்டு வர இருக்கிறது. அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் கச்சா எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதியில் முதல் ஐந்து இடங்களில் உள்ளன. வளைகுடா நாடுகளில் செல்வம் அவற்றின் எண்ணெய் வளமே. ஆனால் உலகம் மாற்று எரிசக்தியை நோக்கி நகரும் சூழல் அந்நாடுகளை நெருக்கடிக்குத் தள்ளி இருக்கிறது.

சவூதியின் வருவாயில் 70 சதவீதம் எண்ணெய் ஏற்றுமதி மூலம் வருகிறது. இந்தச் சூழலில்தான் சவூதியின் பட்டத்து இளவரசர் முகம்மது பின சல்மான், 2030க்குள் சவூதியின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றும் முயற்சியில் இறங்கி இருக்கிறார். தனியார் துறைகள் அதிகரித்தல், எண்ணெய் சாராமல் பிற துறைகளில் முதலீடுகளை அதிகரித்து பொருளாதாரத்தை விரிவாக்கம் செய்தல் போன்ற இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.


எண்ணெய் உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய நாடு ரஷ்யா. அதன் பொருளாதாரக் கட்டமைப்பு எண்ணெய், இயற்கை எரிவாயு, ராணுவத் தளவாடங்கள் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக ரஷ்யா எண்ணெய் வளத்தை முற்றிலும் நம்பி இருப்பதிலிருந்து விலகி, பல்வேறு தளங்களில் இயங்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்தது. ஆனால் அவற்றால் அந்த இலக்கை எட்டமுடியவில்லை. இந்தச் சூழலில், தற்போது நிகழ்ந்து வரும் மாற்றத்தால் ரஷ்யாவுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

எதிர்காலத் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளில் அதிகம் முதலீடு செய்யக்கூடிய நாடு அமெரிக்காவில் தற்போதைய மாற்றம் பெரிய அளிவலான பின்னடைவை ஏற்படுத்தாது. எனவே தற்போதைய மாற்றத்தைத் தன் தொழில்நுட்ப வல்லமையைக் கொண்டு அது எதிர்கொண்டுவிடும். எடுத்துக்காட்டாக, 2008 வரையில் அமெரிக்கா அதன் எண்ணெய் தேவைக்கு பிற நாடுகளையே எதிர்நோக்கி இருந்தது. தற்போது எண்ணெய் உற்பத்தியில் இரண்டாம் பெரிய நாடு அமெரிக்காதான்; ஏற்றுமதியிலும் அது முதன்மையாக விளங்குகிறது.

தற்போதைய மாற்றங்களால் பல லாபங்களைப் பெறவிருக்கும் ஒரு நாடு **சீனா.**

உலக நாடுகள் தற்போது தான் பேட்டரியில் இயங்கும் வாகனங்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஆனால், சீனா சில தசாப்தங்களுக்கு முன்பே இதில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டது. தற்போது சீனாவில் தயாராகும் 75 சதவீத வாகனங்கள் பேட்டரியில் இயங்கக்கூடியவை. பேட்டரி தயாரிப்புக்குத் தேவையான லித்தியம் சீனாவிடம் அதிகம் உள்ளது. உலகின் பல நாடுகளில் லித்தியம் எடுக்கப்பட்டாலும் உலகளவில் உற்பத்தியில் 80 சதவீதம் சீனாவிடம் தான் இருக்கிறது. இதுமட்டுமல்ல, பல நாடுகளில் பயன்படுத்தப்படும் சூரியத் தகடுகளின் முக்கிய பாகங்கள் சீனாவில்தான் தயாரிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட சூரியத் தகடு பேனல் உற்பத்தியில் சீனா 70 சதவீதம் பங்கு வகிக்கிறது.

சீனா இந்த இடத்தை அடைய வேறு சில காரணங்கள் இருக்கின்றன. எண்ணெய் உற்பத்தியில் ஐந்தாவது பெரிய நாடாக சீனா இருந்தாலும், அந்நாட்டின் எண்ணெய் தேவையில் 75 சதவீதம் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. அமெரிக்கா, தென் கொரியா நாடுகளுடன்



சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
# ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.

மோதல் போக்கில் உள்ள சீனா, தன்னாட்டுக்கு வரும் எண்ணெய் அமெரிக்காவால் எந்த நேரத்திலும் தடுத்து நிறுத்தப்படலாம் என்ற அச்சுறுத்தலை எப்போதும் எதிர்நோக்கி இருந்தது. எண்ணெய்த்தேவைக்கு பிற நாட்டை நம்பி இருப்பதை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்த சீனா, மாற்று எரிசக்தி கண்டுபிடிப்பில் தீவிரம் காட்டத் தொடங்கியது. அதன் நீட்சியாக பேட்டரி வாகனப் பயன்பாட்டில் முதன்மை வகிக்கிறது.

அரசியல் ரீதியாக பலப்படுவதைத் தாண்டி சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திலும் சீனா இருக்கிறது. அதிகமாக கரியமில வாயுவை வெளியேற்றும் நாடுகளில் சீனா முதல் இடத்தில் இருக்கிறது. மொத்த உலக நாடுகள் வெளியேற்றும் கார்பன் அளவில் 25 சதவீதம் வரை சீனாவிலிருந்து வெளியேற்றப்படுகிறது. அதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா இருக்கிறது. அரசியல் மற்றும் சூழலியல் நிர்பந்தம் காரணமாக மாற்று எரி ஆற்றலுக்கான தொழில்நுட்பங்களின் உருவாக்கத்தில் சீனா முதன்மை இடத்தை அடைந்துள்ளது.

எப்படி உலக நாடுகள் பெட்ரோல், டீசல் தேவைக்கு வளைகுடா நாடுகளை எதிர்நோக்கி இருக்கின்றனவோ, அதுபோலவே பேட்டரித் தயாரிப்புக்குச் சீனாவை எதிர்நோக்கி இருக்க வேண்டிய சூழல் உருவாகி வருகிறது.

உலகின் மொத்த பொருளாதாரத்தில் எரி ஆற்றல் மட்டும் 87 டிரில்லியன் டாலர் பங்கு வகிக்கிறது. உலகின் மொத்த எரி ஆற்றல் பயன்பாட்டில் 84 சதவீதம் புதை படிவ எரிபொருள்களில் இருந்து பெறப்பட்டு வருகிறது. மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் மேற்சொன்ன மாற்றங்கள் எந்தளவுக்குச் சாத்தியம் என்பதே இதிலுள்ள சவால்!.

நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளாகவே பசுமை எரிஆற்றலை நோக்கி நகரத் தொடங்கிவிட்டன. 2013 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் பசுமை எரிஆற்றலை தொடர்புடைய முதலீடு 70 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. தற்சமயம் ஆண்டுக்கு 1.2 டிரில்லியன டாலர் அளவில் பசுமை ஆற்றல் கட்டமைப்புக்குச் செலவிடப்பட்டு வருகிறது. பல வாகன நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாகவே பேட்டரி முறைக்கு மாறிவிட்டன.

இந்தியாவில் கூட 2030-க்குப் பிறகு விற்பனையாகும் இருசக்கர வாகனங்கள் பேட்டரியில் ஓடக்கூடியதாக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கொரோனா காலகட்டம் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கும் சில வாய்ப்புகளைக் காட்டித்தந்துள்ளது. தலைநகர் டெல்லியில் முற்றிலுமாக பேருந்துகள் கியாஸ் மூலம் இயக்கப்படுகிறது. ஆட்டோமொபைல் துறையில் BS-IV என்ற நிலைப்பாட்டையும், எலக்ட்ரிக் வாகனங்களை முனைப்புடன் முன்னிலைப்படுத்துகின்றன. மத்திய அரசு 15 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வாகனங்களில் பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்டு வரவிருக்கின்றன. உதாரணமாக Scrap Policy

மார்ச் மாதம் முதல் கடந்த ஆகஸ்ட் மாதம் வரையில் உலக நாடுகள் பலவற்றில் தீவிரமான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது; போக்குவரத்து முடங்கியது, தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இதனால் கார்பன் வெளியேற்றம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது. தொழிற்சாலைகளை நிரந்தரமாக மூடிவைத்திருக்க முடியாது. ஆனால் போக்குவரத்தை கட்டுப்படுத்த முடியும். இந்தக் கொரோனா காலத்தில் அலுவலக கலந்தாலோசனைக் கூட்டங்கள் இணையம் வழியே நடைபெற்று வருகின்றன. இதனால் அதற்கென்றான பயணத்துக்கான அவசியமின்மையை உலகம் உணர்ந்து இருக்கிறது. அதேபோல் பல்வேறு துறைகளில் வீட்டிலிருந்து பணிபுரிதல் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அந்த நடைமுறை நிரந்தரமாக்கப்படும் பட்சத்தில் போக்குவரத்து வழியிலான கார்பன் வெளியேற்றம் சற்றேனும் குறைக்கப்படும்.

விறகிலிருந்து நிலக்கரிக்கும், நிலக்கரியிலிருந்து கச்சா எண்ணெய்க்குமான மாற்றம் உடனடியாக நிகழவில்லை. விறகிலிருந்து நிலக்கரிக்கு மாற சுமார் இருநூறு ஆண்டுகள் ஆனது அது போலவே, 1859-ம் ஆண்டே மேற்கு பென்சில்வேனியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டாலும், 1960-ம் ஆண்டுக்குப் பிறகுதான் உலகம் கச்சா எண்ணெய்யை முதன்மை எரிசக்தியாக பயன்படுத்தத் தொடங்கியது.

தற்போது எண்ணெயிலிருந்து பசுமை ஆற்றலுக்கு மாறுவதற்கு காலம் எடுக்கும் என்றாலும் முந்தைய மாற்றங்களைப் போல நீண்ட காலத்தை எடுக்காது. ஏனென்றால் முந்தைய மாற்றங்களில் அரசியல் ரீதியான நிர்பந்தமும், சூழலியல் ரீதியான நிர்பந்தங்களும் குறைவு. ஆனால் தற்போது அப்படி இல்லை. கால நிலைப் பேரழிவு உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. தற்போதைய மாற்றம் வாழ்தலுக்கானது. அதற்கேற்ப கொள்கைகள் உருவாக்கப்படும்.

எனவே தற்போதைய மாற்றம் உடனடியாக நிகழக்கூடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அந்தவகையில் பசுமை எரிசக்தியை நோக்கிய மாற்றம் இந்நூற்றாண்டின் வரலாற்று மாற்றமாக அமையும்.

- நன்றி: தி இந்து (தமிழ்)


Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# Seven spritual ways of success in life

- Dr. Deepak Chopra, (Thanks to Sivaprasad Srinivasan)

There are many aspects to success; material wealth is only one component. Moreover, success is a journey, not a destination. Material abundance, in all its expressions, happens to be one of those things that makes the journey more enjoyable. But success also includes good health, energy and enthusiasm for life, fulfilling relationships, creative freedom, emotional and psychological stability, a sense of well-being and peace of mind. Even with the experience of all these things, we will remain unfulfilled unless we nurture the seeds of divinity inside us. In reality, we are divinity in disguise, and the gods and goddesses in embryo that are contained within us seek to be fully materialized. Although I call the laws I'm about to discuss The Seven Spiritual Laws of Success, they could easily be called The Seven Spiritual Laws of Life. This is because they are the same principles that nature uses to create everything in material existence--everything we can see, hear, smell, taste or touch.

Success in life could be defined as the continued expansion of happiness and the progressive realization of worthy goals. Success is the ability to fulfill your desires with effortless ease. And yet success, including the creation of wealth, has always been considered a process that requires hard work, and it is often considered to be at the expense of others. We need a more spiritual approach to success and to affluence, which is the abundant flow of all good things to you. With the knowledge and practice of spiritual law, we put ourselves in harmony with nature and create with carefreeness, joy and love. True success is the experience of the miraculous. It is the unfolding of the divinity within us. It is the perception of divinity wherever we go, in whatever we perceive--in the eyes of a child, in the beauty of a flower, in the flight of a bird. When we begin to experience our life as the miraculous expression of divinity--not occasionally, but all the time--then we will know the true meaning of success.

Now let's go over The Seven Spiritual Laws of Success and see how we can apply them in our lives.

### 1) The Law of Pure Potentiality


This law is based on the fact that we are, in our essential state, pure consciousness. Pure consciousness is pure potentiality; it is the field of all possibilities and infinite creativity. When you discover your essential nature and know who you really are, in that knowing itself is the ability to fulfill any dream you have, because you are the eternal possibility, the immeasurable potential of all that was, is and will be. This law could also be called the Law of Unity, because underlying the infinite diversity of life is the unity of one all-pervasive spirit. There is no separation between you and this field of energy. One way to access the field is through the daily practice of silence, meditation and non-judgment. Spending time in nature will also give you access to the qualities inherent in the field: infinite creativity, freedom and bliss.

### 2) The Law of Giving

This law could also be called the Law of Giving and Receiving, because the universe operates through dynamic exchange. The flow of life is nothing other than the harmonious interaction of all the elements and forces that structure the field of existence. Because your body and your mind and the universe are in constant and dynamic change, stopping the circulation of energy is like stopping the flow of blood. Whenever blood stops flowing, it begins to clot, to stagnate. That is why you must give and receive in order to keep wealth and affluence--or anything you want--circulating in your life. If our only intention is to hold on to our money and hoard it--since it's life energy, we will stop its circulation back into our lives as well. In order to keep that energy coming to us, we have to keep the energy circulating. Thus, the more you give, the more you will receive. The best way to put The Law of Giving into operation is to make a decision that any time you come into contact with anyone, you will give them something. It doesn't have to be in the form of material things; it could be a flower, a compliment or a prayer. In fact, the most powerful forms of giving are non-material. The gifts of caring, attention, affection, appreciation and love are some of the most precious gifts you can give, and they don't cost you anything.

### 3) The Law of Karma (or Cause and Effect)

"Karma" is both action and the consequence of that action; it is cause and effect simultaneously, because every action generates a force of energy that returns to us in kind. There is nothing unfamiliar about the Law of Karma. Everyone had heard the expression, "What you sow is what you reap." Obviously, if we want to create happiness in our lives, we must learn to sow the seeds of happiness. Therefore, karma implies the action of conscious choice-making. Whether you like it or not, everything that is happening at this moment is a result of the choices you've made in the past. Unfortunately, a lot of us make choices unconsciously, and therefore we don't think they are choices--and yet, they are. If you step back for a moment and witness the



வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது
3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.



https://youtu.be/-JMVniVMLr0

choices you are making as you make those choices, then in just this act of witnessing, you take the whole process from the unconscious realm into the conscious realm. This procedure of conscious choice-making and witnessing is very empowering.You can use the Law of Karma to create money and affluence, and the flow of all good things to you, any time you want. But first, you must become consciously aware that your future is generated by the choices you are making in every moment of your life. If you do this on a regular basis, then you are making full use of this law. The more you bring your choices into the level of your conscious awareness, the more you will make those choices which are spontaneously correct--both for you and those around you.

#### 4) The Law of Least Effort

This law is based on the fact that nature's intelligence functions with effortless ease and abandoned carefreeness. This is the principle of least action, of no resistance. This is, therefore, the principle of harmony and love. When we learn this lesson from nature, we easily fulfill our desires. In Vedic Science, the age-old philosophy of India , this principle is known as the principle of economy of effort, or "do less and accomplish more." Ultimately, you come to the state where you do nothing and accomplish everything. This means that there is just a faint idea, and then the manifestation of the idea comes about effortlessly. What is commonly called a "miracle" is actually an expression of the Law of Least Effort. Least effort is expended when your actions are motivated by love, because nature is held together by the energy of love. When you seek power and control over other people, you waste energy. When you seek money or power for the sake of the ego, you spend energy chasing the illusion of happiness instead of enjoying happiness in the moment. When your actions are motivated by love, your energy multiplies and accumulates--and the surplus energy you gather and enjoy can be channeled to create anything that you want, including unlimited wealth. There are three components to the Law of Least Effort--three things you can do to put this principle of "do less and accomplish more" into action. The first component is acceptance. Acceptance simply means that you make a commitment: "Today I will accept people, situations, circumstances and events as they occur." This means I will know that this moment is as it should be, because the whole universe is as it should be. The second component is responsibility. This means not blaming anyone or anything for your situation, including yourself. This allows you the ability to have a creative response to the situation as it is now. All problems contain the seeds of opportunity, and this awareness allows you to take the moment and transform it to a better situation or thing. The third component to the Law of Least Effort is defenselessness. This means that you have relinquished the need to convince or persuade others of your point of view. If you relinquish this need you will in that relinquishment gain access to enormous amounts of energy that have been previously wasted.

#### 5) The Law of Intention and Desire

This law is based on the fact that energy and information exist everywhere in nature. A flower, a rainbow, a tree, a human body, when broken down to their essential components are energy and information. The whole universe, in its essential nature, is the movement of energy and information. The only difference between you and a tree is the informational and energy content of your respective bodies. You can consciously change the energy and informational content of your own quantum mechanical body, and therefore influence the energy and informational content of your extended body--your environment, your world--and cause things to manifest in it. The quality of intention on the object of attention will orchestrate an infinity of space-time events to bring about the outcome intended, provided one follows the other spiritual laws of success. Intention lays the groundwork for the effortless, spontaneous, frictionless flow of pure potentiality. The only caution is that you use your intent for the benefit of mankind.

#### 6) The Law of Detachment

This law says that in order to acquire anything in the physical universe, you have to relinquish your attachment to it. This doesn't mean you give up the intention to create your desire. You give up your attachment to the result. This is a very powerful thing to do. The moment you relinquish your attachment to the result, combining one-pointed intention with detachment at the same time, you will have that which you desire. Anything you want can be acquired through detachment, because detachment is based on the unquestioning belief in the power of your true Self. Attachment comes from poverty consciousness, because attachment is always to symbols. Detachment is synonymous with wealth consciousness, because with detachment there is freedom to create. True wealth consciousness is the ability to have anything you want, anytime you want, and with least effort. To be grounded in this experience you have to be grounded in the wisdom of uncertainty. In this uncertainty you will find the freedom to create anything you want.

#### 7) The Law of "Dharma" or Purpose in Life

The seventh spiritual law of success is the Law of Dharma. (Dharma is a Sanskrit word that means "purpose in life.") This law says that we have taken manifestation in physical form to fulfill a purpose. You have a unique talent and a unique way of expressing it. There is something that you can do better than anyone else in the whole world--and for every unique talent and unique expression of that talent, there are also unique needs. When these needs are matched with the creative expression of your talent, that is the spark that creates affluence. Expressing your talents to fulfill needs creates unlimited wealth and abundance. There are three components to the Law of Dharma. The first says that each of us is here to discover our true Self. The second component is to express our unique talents; the expression of that talent takes you into timeless awareness. The third component is service to humanity. When you combine the ability to express your unique talent with service to humanity, then you make full use of the Law of Dharma. The Seven Spiritual Laws of Success are powerful principles that will enable you to attain self-mastery. If you put your attention on these laws and practice the steps outlined above, you will see that you can manifest anything you want--all the affluence, money and success you desire. You will also see that your life becomes more joyful and abundant in every way, for these laws are also the spiritual laws of life that make living worthwhile



# பங்குச்சந்தையில் விருப்பம் இல்லாதவர்களுக்கும் ஆர்வத்தைத் தரும் அசெட் அலோகேஷன் - இது நீண்ட கால லாபத்துக்கு சரியான வழி

எப்போதுமே பணத்தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில்தான் நாம் அங்கே, இங்கே என்று தேடிப்பார்ப்போம். பீரோவில், சட்டைகளுக்கு மத்தியில், கப்போர்டில் உள்ள டப்பாக்களில், சேமிப்புக் கணக்கில் (அதிகம் பயன்படுத்தாத) என்று எல்லா இடங்களையும் தேடி ஒரு கணிசமானத் தொகையை சேர்த்துவிடுவோம். இதே போன்று ஓர் உத்தியை, காசு பண்ணும் கலையில் கற்றுக்கொள்ளப் போகிறோம். இது பங்குச் சந்தையில் உள்ளவர்களுக்கு.

பங்குச் சந்தையில் நீங்கள் நஷ்டம் அடையாமல் லாபத்தை அடைய வேண்டுமானால் அதற்கான யுக்திகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அதில் சீர் வழி, பணத்தை பல்வேறு இனங்களில் முதலீடு செய்து சந்தை சரியும் பொழுது ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க இந்த **அசெட் அலோகேஷன்** திட்டத்தில் முதலீடு செய்து சீரான லாபம் அடையமுடியும்.

இந்த முறையில் குறைந்தது 5 ஆண்டுகளுக்கும் மேலாக தங்களது முதலீடுகளை வைத்துக் கொண்டால் நீண்ட கால கனவுகளை நிறைவேற்றிக்கொள்ளலாம். உங்களுடைய பணமதிப்பையும் உயர்த்திக் கொள்ளலாம். அரசாங்க கொள்கைகள், பொருளாதார சூழ்நிலைகள், இயற்கை நிகழ்வுகள், உலக அளவில் நடைபெறும் நிகழ்வுகள், நாட்டின் தேவைகள், வேளாண் விளைபொருள் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மாற்றங்கள் இது போன்ற காரணிகளால் பங்கு சந்தை ஏற்றமடையும், இறக்கமும் அடையும். இது தவிர சில துறைகள் சில காலங்களில் மிக துரிதமாக வளர்ச்சி அடையும்.

இதையெல்லாம் நாம் உன்னிப்பாக கவனித்து நாம் நமது முதலீட்டை வகுத்துக்கொள்வது என்பது நாம் எல்லோருக்கும் கடைப்பிடிக்க முடியாத செயலாகும். இந்த சூழ்நிலைகளை தவிர்க்க இந்த அசெட் அலோகேஷன் முறையில் பயன்படுத்தினால் பங்கு தவிர்த்து மற்ற இனங்களிலும் நமது முதலீட்டை பங்களிப்பு செய்துகொண்டு இறங்குமுகத்தில் மிகுந்த நஷ்டமடையாமல், சந்தை ஏறும் சமயத்தில் பங்கு முதலீட்டில் நமது பங்களிப்பை அதிகரிக்கச் செய்து சீரான லாபம் அடைய முடியும்.

நீண்ட காலத்தில் அதிக லாபம் ஈட்ட 'அசெட் அலோகேஷன்' உத்தி உதவுகிறது. 'அசெட் அலோகேஷன்' என்பது உங்களுடைய முதலீட்டை எப்படி பல்வேறு முதலீட்டு திட்டங்களில் பிரித்து முதலீடு செய்வது என்பதாகும்.

பங்குகள், கடன் பத்திரங்கள், தங்கம் மற்றும் பிற முதலீட்டுத் திட்டங்கள் இந்த அசெட் அலோகேஷன் உத்தியில் இருக்கின்றன. இந்த முதலீட்டு திட்டங்களில் உங்களிடம் உள்ள தொகையைப் பிரித்து முதலீடு செய்ய வேண்டும். இவற்றில் எதில் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்பதை அறிதல் முக்கியமானது. ஏனெனில் இவை ஒரே மாதிரியாக செயல்படுவதில்லை. ஒவ்வொரு சூழலிலும் சந்தையைப் பொறுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இயங்கும்.

ஒரு திட்டத்தில் உங்களுடைய முதலீடு குறைவாக லாபம் ஈட்டுகிறது எனில் மற்றொரு திட்டத்தில் நீங்கள் செய்துள்ள முதலீடு அதிக லாபத்தை தரும் வாய்ப்பு உள்ளது. இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் போது உங்களுடைய மொத்த முதலீடு உங்களுக்கு ஓரளவு லாபத்தை வழங்குவதாக இருக்கும்.

அசெட் அலோகேஷனின் நோக்கம் நஷ்டத்தை முடிந்த அளவு குறைத்து நீண்டகாலத்தில் நல்ல லாபத்தை ஈட்டுவதுதான்.


வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
94430 34009
வரம் TV
Google Play Store - ல் SCT app
மூலம் நேரடியாக கண்டுகளியுங்கள்...
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
Contact:
99408 25179
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

முதலீடு குறித்த ஆய்வுகளின்படி பார்க்கும்போது சரியான சமயத்தில் சரியான திட்டத்தில் செய்யும் முதலீடு உங்கள் போர்ட்ஃபோலியோவுக்கு நல்ல லாபத்தை ஈட்டித்தரும். உதாரணத்திற்கு, போர்ட்ஃபோலியோவின் 90 சதவீத ரிட்டர்ன் அசெட் அலோகேஷனில் கால அளவின் அடிப்படையிலானது. பாதுகாப்பான முதலீடு என்பது 5 சதவீத அளவில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே சரியான நேரத்தில் சரியான முதலீட்டை சரியான விகிதத்தில் மேற்கொள்வது அவசியம்.

அசெட் அலோகேஷன் உத்தியை ஒரு கொள்கை அளவில் எளிதில் புரிந்துகொள்ள முடிவதாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் அனுபவமில்லாத முதலீட்டாளர்களுக்கு அது செயல்படுத்த கடினமானதாகும். சந்தையின் போக்குகளை உணர்ந்து சரியான சமயத்தில் சரியான முதலீட்டு முடிவுகளை எடுப்பதற்கு பல ஆண்டுகால அனுபவம் தேவை.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளின் நகர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் மேக்ரோ விஷயங்களைத் தொடர்ந்து கண்காணித்து அதற்கேற்ப முடிவுகளை எடுப்பது எளிதான காரியமல்ல. மேலும் ஒவ்வொரு முதலீட்டு வகையிலும் வெவ்வேறு விதமான வரி விதிப்புகளும் இருக்கின்றன. இதனால் சில நேரங்களில் முதலீட்டின் மீதான வருமானத்தை வரி தின்றுவிடுவதுண்டு.

இதுபோன்ற காரணங்களால் முதலீட்டு வகைகளை ஒன்றுகொன்று சமநிலை செய்வதும் நிர்வகிப்பதும் எளிதாக இருப்பதில்லை.

ஆனால் இந்திய மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்கள் முதலீட்டாளர்களுக்காக 'அசெட் அலோகேஷன் ஃபண்ட்' என்ற வகையின் கீழ் இவற்றை நிர்வகிக்கும் வேலையை செய்துவருகின்றன. இந்த ஃபண்டுகள் முதலீட்டாளர்களின் அசெட் அலோகேஷன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுகின்றன. முதலீட்டாளர்கள் இந்த ஃபண்டுகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தங்களின் முதலீடுகள் மீது ரிஸ்க்கைக் கடந்து நல்ல வருமானத்தைப் பெற முடியும்.

கொடாக், ஐசிஐசிஐ, புருடென்சியல், நிப்பான் போன்ற நிறுவனங்கள் இந்த திட்டங்களை நடத்தி வருகின்றனர். மாதம் ஒருமுறை கட்டும் திட்டமும் இவர்களிடம் உள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் நமது முதலீட்டை இது போன்ற திட்டங்களில் பங்கு பெற செய்து நமது செல்வ வளத்தை பெருக்க முடியும்.

உங்களது நேற்றைய செயல்கள், எண்ணங்கள் தான் இன்றைய உங்களது வாழ்க்கை. இன்றைய எண்ணங்களும், செயல்களும் தான் உங்களது நாளைய வளமான வாழ்க்கையாகத் தரப் போகின்றது. அங்கத்தினர்கள் அனைவரும் வளமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற சேம்பர் விரும்புகிறது.

– எஸ்.எஸ். ராம்சுந்தர்

## சிட்கான் 2021 மாநாடு – தலைவர் தேர்வு



சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 6வது செயற்குழு கூட்டம் கடந்த 26.01.2021 அன்று காலை நடைபெற்றது. இதில் சிட்கான் 2021 மாநாடு நடைபெற முடிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்கு தலைவராக சேம்பர் துணைத்தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். அவரை சேம்பர் முன்னாள் தலைவர் திரு. E.R. குமரேசன் அவர்கள் பொன்னடை அணிவித்து வெற்றி பெற வாழ்த்துக்களை தெரிவித்தார். முன்னாள் தலைவர் திரு. S.K.R. ரமேஷ், வெளியுறவுத் துறை செயலாளர் திரு. V.G. ராம்தாஸ் மற்றும் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 38, கணுக்கால் எலும்பு முறிந்ததில் 2 வருடத்திற்கு முன் Screw போட்டு சரி செய்யப்பட்டது. இப்பொழுது கணுக்கால் மூட்டினில் தேய்மானம் அடைந்து வலி மிகவும் உள்ளது. எந்தவித அசைவும் இல்லை. காலிமனை தரையில் ஊன்ற முடியவில்லை. எனக்கு Ankle Fusion என்னும் சிகிச்சை அளிக்கப்போகிறார்கள். அந்த சிகிச்சைக்கு பின் என்னால் வலியின்றி நடக்க முடியுமா?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டு உள்ளது கணுக்கால் மூட்டின் தேய்மானம் ஆகும். மூட்டு தேய்மானம் தீவிரமாக இருந்தால் அதற்கு Ankle Fusion செய்யப்படும். சிகிச்சைக்கு பின் வலி நீங்கும். அசைவில் மாற்றம் இருக்காது. நன்றாக நடக்க முடியும். வீக்கம் ஆறு மாதங்கள் வரை இருக்கலாம். நவீன மருத்துவத்தில் இந்த சிகிச்சை மூட்டு நுண்துளை வாயிலாக செய்யமுடியும். அதை Arthroscopic Ankle Fusion என்று கூறப்படுகிறது. அவ்வாறு செய்தால் வெற்றி விகிதம் மிக அதிகம். வீக்கமும் இருக்காது. மருத்துவரிடம் கலந்து ஆலோசிக்கலாம்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436


பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

# மொபைல் ஃபோன் சார்ஜ் போடுகிறீர்களா?...

## கொஞ்சம் இதை தெரிஞ்சிக்கோங்க...



செல்போன், அனைவரது கைகளிலும் இன்று தவழ்ந்து விளையாடுகிறது. நமது அன்றாட வாழ்க்கையில் முக்கியமானது செல்போன் முக்கிய அங்கம் வகிக்கத் தொடங்கிவிட்டது. வீட்டில் செல்போன் விட்டுவிட்டு வந்துவிட்டால் ஆபிஸில் வேலை செய்யவே மனம் ஓடாது எனும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோர் பலர். செல்போனை பயன்படுத்த தெரிந்த நமக்கு அதனை பராமரிக்க பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை. முக்கிய சார்ஜ் போடும் விஷயத்தில்.

உங்கள் ஸ்மார்ட்போனை சார்ஜ் போடும் போது தவிர்க்க வேண்டிய சில விஷயங்களை இங்கு காண்போம்.

- உங்கள் ஸ்மார்ட் போனிற்கு ஒரிஜினல் ப்ராண்ட் சார்ஜரை மட்டுமே பயன்படுத்துங்கள். விலை குறைவாகக் கிடைக்கிறது என்று மலிவு விலை சார்ஜரை ஒருபோதும் பயன்படுத்தாதீர்கள்.
- உங்கள் ஒரிஜினல் சார்ஜர் தொலைந்துவிட்டால் மார்க்கெட்டில் கிடைக்கும் இன்னொரு ஒரிஜினல் சார்ஜரை வங்கி பயன்படுத்துங்கள். இரவல் கேட்டு மற்ற ப்ராண்ட் சார்ஜரை போடாதீர்கள்.
- பவர் பேங்கை பயன்படுத்துபவர்கள் தரமான கம்பெனி பிராண்டை பயன்படுத்துவது நல்லது. இல்லையென்றால் அந்த பவர் பேங்க் அதிக மின் அழுத்தம் அல்லது குறைவான மின் அழுத்தப் பிரச்சனையை ஏற்படுத்திவிடலாம்.
- பவர் பேங்க் பயன்படுத்துகையில் ஹெட்போனை பயன்படுத்தக் கூடாது. இதனால் ஓவர் ஹீட்டாகி போனின் பேட்டரி அதிவிரைவில் பழுதடையும்.
- சிலர் சார்ஜ் போடும்போதும் பேனல் கவரை கழற்ற மாட்டார்கள். அது தவறு. ஓவர் ஹீட்டாகி இருக்கும் போனை சற்று கூலிங்காக வைக்கவும் கீழே விழுந்தாலும் உடைந்து நொறுங்காமலும் இருக்க உதவுகிறது பேனல். ஆனால் சார்ஜ் செய்யும் போது அதையும் சேர்த்து சார்ஜில் போட்டால் சூடு அதிகரித்து போன் சீக்கிரம் ரிப்பேர் ஆகிவிடும். எனவே காட்டன் துணியில் கீழ் வைத்து சார்ஜ் போடுங்கள்.
- முக்கியமாக, இரவு முழுவதும் சார்ஜ் போடாதீர்கள். இரவில் சார்ஜ் போட நினைப்பவர்கள் ஒரு மணி நேரமாவது சார்ஜ் ஏற்றுங்கள். விடியும் வரை போன் ப்ளக் பாயிண்டில் இருந்தால் அதன் பேட்டரி மிக விரைவில் செயல்படும் திறன் குறைந்து ஆயுள் முடிந்துவிடும்.
- சார்ஜ் போடும் முன், அனாவசியமான ஆப்களை பின்னணியில் வைத்திருப்பதை தவிர்க்கவும். அவை சார்ஜ் போடும் போது தாக்குப் பிடிக்க இயலாமல் அதிக நேரம் சார்ஜ் செய்யும்படி நேரும். அத்தனை ஆப்களையும் அணைத்துவிட்டு சார்ஜ் போடுவது உங்கள் ஸ்மார்ட்போனுக்கு நன்மை தரும்.
- ஸ்விட்ச் ஆஃப் ஆனதும்தான் சார்ஜ் போடுவது தவறு. மிகவும் குறைந்தபட்சம் 10 சதவிகிதம் இருக்கும்போதே சார்ஜ் போட்டுவிடுங்கள்.
- சார்ஜ் போடுபவர்கள், அவசரத்தேவைக்கு 20 சதவீதம் 30 சதவீதம் என சார்ஜ் போடாதீர்கள், போனில் குறைந்தபட்சம் 80 சதவிகிதம் அளவுக்காவது சார்ஜ் ஏற வேண்டும். அப்போதுதான் உங்கள் பேட்டரியின் செயல்திறன் சரியாக இருக்கும்.
- யூ.எஸ்.பி. கேபிள் வழியாக லேப்டாப் அல்லது டெஸ்க்டாப்பில் சார்ஜ் செய்தால் அது போதிய அளவில் மின் அழுத்தம் கிடைக்காமல் போகிறது. முழுவதும் சார்ஜ் ஆகாத நிலையில் அதிலிருந்து நாம் அடிக்கடி உருவினால் வெகு விரைவில் உங்கள் பேட்டரி டேமேஜ் ஆகிவிடும்.

எனவே உங்கள் செல்போனின் ஸ்பேசிஃபிகேஷனுக்குத் தகுந்த மின் அழுத்தத்தை ஏற்கும் சக்தியுள்ள ஒரிஜினல் சார்ஜரை பயன்படுத்துவது சாலச் சிறந்தது.

நன்றி: தினமணி


SRIS TEXTURE
ONLY TEXTURE SINCE 2009
Cell: 97891 08600
SRIS INTERIOR
* INTERIOR * WALL TEXTURE
* CONSTRUCTION CHEMICAL
No: 72, Devangar High School Road,
Coimbatore - 641 002
ID: srisinterior@rediffmail.com




# பெண் எனும் ஆக்க சக்தியை போற்றுவோம்!

இந்த உலகம் **'காரணம், காரணி'** இவைகளின் சம்பந்தத்தில் தான் இயங்குகிறது. ஒரு காரியம் செய்வதற்கு 'காரண, காரியம்' இவ்விரண்டும் அடித்தளம். மண்ணால் பானை செய்யும் குயவன் போல; கல்லால் சிற்பம் வடிக்கும் சிற்பி போல. இங்கு கல்லும், மண்ணும் காரணியாக கருதப்படும்; குயவனும், சிற்பியும் காரணப் பொருளாக கருதப்படுகிறார்கள். இவ்விரண்டின் சம்பந்தத்தின் விளைவு தான் 'பானையும், சிற்பமும்' ஆகும். நாம் இங்கு புரிந்து கொள்வது, இந்த காரணி மற்றும் காரணத்தின் சம்பந்தத்தால் தான் ஒரு காரியம் நடைபெருகிறது என்பதாகும். இந்த உலக இயக்கத்திற்கு இதுவே ஆதாரம்.

இவ்வாறாகத்தான் உலகத்தில் அனைத்து செயல்பாடுகளும் நடைபெருகிறது. பஞ்சபூதங்களால் உருவானது இந்த உலகம். மனிதன் வாழ்வதற்கு சகலத்திற்கும் அடிப்படையாக இருப்பது இந்த பஞ்சபூதங்களாகும். இங்கு பஞ்ச பூதங்கள் எனும் காரணியை வைத்து மனிதன் எனும் காரணப்பொருள் தன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான். மனிதன் உயிர்வாழ உணவு தேவைப்படுகிறது. உணவு தேவைக்கு பூமியில் விதை விதைக்கிறான் நெல்மணிகளை பெறுகிறனர். இது போல் நீர், நெருப்பு என அனைத்தையும் கொண்டு தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கிறான். அத்தனைக்கும் ஆதாரமான காரணிகளைக் கொண்டு உருவாக்கிய மனிதன் காரணமாகிறான்.

மனிதன் உலகில் வாழும் உயரிய ஜீவராசி. இங்கு ஆண் பெண் இருபாலர்களில் ஒரு உயிரை பெற்றெடுக்கும் பெருமை இயற்கையில் பெண்ணுக்கே உண்டு. அதற்கு காரணமாக இருப்பது ஆண். ஆகவே இங்கு பெண் என்பவள் காரணியாக கருதப்படுகிறாள். நம் முன்னோர்கள் ஏன் இந்த உலகத்தை, இயற்கையை, பஞ்சபூத சக்திகளை பெண்ணோடு ஒப்பிடுகிறார்கள் என்பது இதிலிருந்து புரிந்திருக்கும்.

மனிதன் இந்த உலகத்தை, இயற்கையை சரியான முறையில் அணுகும் போது மனித சக்திக்கு நல்வழியையும் முன்னேற்றத்தையும் தருகிறது. மாறாக, எதிர்மறையாக செயலாற்றும்பொழுது பேரிழப்பையும், அழிவையும் தருகிறது. ஒரு காரணப்பொருள் எந்த ஒரு காரணிகளையும் சரியான முறையில் கையாண்டால் தான் காரியம் சித்திக்கும் என்பதே இதன் சூட்சமம்.

அதனடிப்படையில், இங்கு காரணியாக கருதப்படும் பெண்களை, காரணப்பொருளாக கருதப்படும் ஆண்கள் சரியான முறையில் அணுகும்பொழுது ஆண் வர்க்கத்தினருக்கு முன்னேற்றத்தைத் தருகிறது என்பதை விளங்கிகொள்ளலாம்.

ஆறறிவு படைத்த மனிதன் நாகரீக மாற்றத்திற்கு உள்ளாகிறான். இப்படித்தான் வாழ வேண்டும் என்று சமுதாய கட்டமைப்பை உருவாக்க முயல்கிறான். அதற்கு ஆண் பெண் இருவரும் இணைந்து குடும்பமாக வாழ நினைக்கிறான். அதற்கு 'பெண்' மூல காரணியாக விளங்குகிறாள். இதனடிப்படையில் தான் நம் முன்னோர்கள், மனித சமுதாயம் தலைத்தோங்க, பெண் சக்தியை ஆதாரமாகக் கொண்டு குடும்பம் எனும் கட்டமைப்பை உருவாக்கினார்கள்.

கால நிலை, நிலப்பரப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அதற்கு தகுந்த கலை, கலாச்சாரம், பண்பாடு, ஆன்மீகம் என்ற நான்கு தூண்களை கட்டமைத்து நல்ல சமுதாயத்தை உருவாக்கினார்கள். மனித வாழ்க்கை வளமானது. எப்படி? அனைத்திற்கும் பெண் சக்தியே காரணி. அதை சரியாக அணுகிய ஆணின் ஆற்றலே காரணம்.

நம் பாரத தேசத்தில் இன்றளவும் சமுதாய கட்டமைப்பு அந்நிய சக்திகளால் சிற்சில சேதங்கள் ஏற்பட்டாலும், சீர்குலையாமல் இருக்கிறது என்றால் பெண் சக்தி எனும் அஸ்திவாரம் பலமாக இருப்பதால் தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

பெண்கள் கண்ணாடி போன்றவர்கள், ஒரு சமுதாயம் சிறப்பாக இருக்கிறதா? இல்லையா? என்பதை கண்டறிய பெண்களை வைத்தே தெரிந்து கொள்ளலாம். அதன் மூலம் அச்சமுதாயத்தின் ஆண்களின் ஆற்றலை புரிந்துகொள்ள முடியும்.

'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்கிற கூற்று தவறு. ஆண்கள் பெண்களை அணுகும் முறையின் அடிப்படையில் தான் பெண்கள் ஆக்க சக்தியாகவோ, அழிவு சக்தியாகவோ வெளிப்படுகின்றனர். கூற்றில் ஆண்கள் பெண்களை அணுகும் முறையின் அடிப்படையில் தான் பெண்கள் நல்லவைகளை ஆக்கும் சக்தியாகவும், தீயவைகளை அழிக்கும் சக்தியாகவும் வெளிப்படுகின்றனர்.

ஆண் சக்தியைப் பெருமைபடுத்த, மனிதகுலம் தலைத்தோங்க, சமுதாயம் வளர அடித்தளமாக இருக்கும் பெண் சக்திகயை போற்றுவோம். அவர்களுக்கு ஆண் வர்க்கத்தின் சார்பாக, மார்ச் 8 தினத்தை கருத்தில் கொண்டு, மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மார்ச் 8 மகளிர் தின வாழ்த்துக்கள்** - இதழ் குழு



PG INDIA

PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI




# F.I.R.

## முதல் தகவல் அறிக்கை

காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது எவ்வாறு என்பது பற்றிய அடிப்படை அறிவு ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். குற்றம் எந்த காவல்நிலைய எல்லைக்குள் நடந்ததோ அந்த காவல் நிலையத்தில் மட்டுமே புகார் கொடுக்கப்பட வேண்டும். ஒரு வேலை தவறுதலாக வேறு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால், அந்த காவல் நிலைய அதிகாரி முறையான காவல்நிலைய எல்லையை தெரியப்படுத்தி அறிவுறுத்த வேண்டும்.

குற்றங்கள், பிடியாணை இன்றி கைது செய்யக்கூடிய குற்றங்கள் (Cognizable Offences), பிடியாணையுடன் மட்டுமே கைது செய்யக்கூடிய குற்றங்கள் (Non Cognizable Offence) என்று இரண்டாக சட்டத்தால் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றங்களுக்கு மட்டுமே காவல்துறை அதிகாரிகள் குற்றம் பற்றிய தகவல் கிடைத்ததும் முதல் தகவல் அறிக்கையை (FIR) CrPC பிரிவு 154ன் கீழ் பதிவு செய்யமுடியும்.

காவல் நிலையத்திற்கு, ஒரு குற்றச்சம்பவம் தொடர்பான தகவலானது எழுத்து மூலமாக நேரடியாக கொடுக்கப்பட வேண்டும். வாய்மொழியாக புகார் கொடுத்தால் அதை காவல் துறை அதிகாரி எழுத்தால் எழுதி புகார்தாரருக்குப் படித்துக் காட்டி கையெழுத்துப் பெற வேண்டும்.

புகாரில் தேதி, சம்பவ நேரம், சம்பவ இடம், சம்பவம் எப்படி நடந்ததோ... அதை அப்படியே குறிப்பிட வேண்டும். புகாரில் சொல்லப்பட்ட குற்றச் சம்பவம் இந்திய சட்டங்களில் ஏதேனும் ஒன்றிலாவது குற்றமாக இருக்க வேண்டும். புகார் கொடுப்பவருக்கு உடனடியாக இலவசமாக முதல் தகவல் அறிக்கை நகல் கொடுக்கப்பட வேண்டும்.

**புலன் விசாரணை:** முதல் தகவல் அறிக்கை என்பது ஒரு குற்றம் சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு வரும் முதல் தகவல் பற்றிய அறிக்கையாகும். முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தபின் தான் புலன்விசாரணை தொடங்க வேண்டும். புகாரைப் பதிவு செய்யும் காவல் அதிகாரியே புலன் விசாரணையையும் செய்யக்கூடாது என்பது பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை. அவ்வாறு செய்தால் உண்மையை கண்டறிய முடியாமல் போய்விட வாய்ப்புள்ளது.

போதை தடுப்பு பிரிவு காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே புலன்விசாரணை சில வழக்குகளில் தொடங்கிவிடுகிறார்கள். காரணம் காவல்நிலையத்திற்கு வந்து முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு புலன்விசாரணை செய்வது போதைபொருள் கடத்தல் வழக்கு நடைமுறைகளில் சாத்தியம் இல்லை.

**FIR யார் யாருக்கு அனுப்பப்படும்?:** முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அதிகாரி அதன் அசல் நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்ப வேண்டும். ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரிக்கு, புலன் விசாரணைக்காக அனுப்ப வேண்டும். ஒரு நகலை மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒரு நகலை

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
92445 00633
99433 79499
SRB சில்க்ஸ் பொட்டிக்
158 & 158A, தெற்கு மாசி வீதி, மதுரை – 1.
SRB Silks & Boutique
59, South Bazaar, Palayam Kottai,
Tirunelveli. Cell : 63852 13135
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.
SRB Silks & Boutique
Raja Annamalai Road, Saibaba Colony,
Coimbatore. Cell : 94869 29246
கூட்டமாக இருக்கும் இடங்களை தவிர்க்கவும்

புகார் கொடுப்பவருக்கு கொடுக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் நீதிமன்றத்தின் மூலமாகக் இலவசமாக கொடுக்கப்படும்.

ஒரு குற்றவழக்கை தொடங்கி வைப்பதே இந்த முதல் தகவல் அறிக்கை தான் ஒரு குற்றத்திற்கு ஒரு முறை தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும். ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சியாக ஒரே நபர்களால் செய்யப்பட்ட ஒரே வகையான அல்லது பல்வேறு வகையான குற்றங்களை ஒருங்கிணைத்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம். குற்றத்தை செய்தவரே காவல் நிலையத்தில் நேரடியாக சென்றும் புகார் கொடுக்கலாம்.

**FIR மொழி:** முதல் தகவல் அறிக்கை அந்தந்த மாநில மொழியில் பதிவு செய்யப்படும். ஒரே குற்றத்திற்கு இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாது. மத்திய புலனாய்வு அமைப்பிற்கு ஒரு வழக்கு, புலன்விசாரணைக்கு மாற்றப்படும் போது அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்க்கப்படும். அப்பொழுது அதற்கு வேறு ஒரு எண் கொடுக்கப்படும். முதல் தகவல் அறிக்கைக்கு கொடுக்கப்படும் வரிசை எண்ணிற்கு குற்றி எண் (Crime Number) என்று பெயர். முதல் தகவல் அறிக்கை அச்சிட்ட படிவத்தில் இருக்கும்.

ஓடும் ரயிலில் குற்றம் நடந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வசதியாக ரயிலிலேயே ரயில்வே அதிகாரியிடம் முதல் தகவல் அறிக்கையின் படிவம் இருக்கும். முதல் தகவல் அறிக்கையை மட்டுமே வைத்து ஒருவருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கிட முடியாது. இந்திய சாட்சிய சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கையை சாட்சியங்களை முரண்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

முதல் தகவல் அறிக்கை தவறாக, கவனக்குறைவாக சட்டத்திற்கு புறம்பாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலன்விசாரணை அதிகாரிக்கு தெரியவந்தால் நீதிமன்றத்தில் CrPC 173-ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்பொழுது முதல் தகவல் அறிக்கையை முடிவுக்கு கொண்டு வரலாம்.

முதல் தகவல் அறிக்கையை தகுந்த காரணமின்றி பதிவு செய்யாமல் மறுப்பு தெரிவிக்க காவல் அதிகாரிக்கு அதிகாரமில்லை. புகாரில் கையெழுத்திட மறுக்கும் புகார்தாரருக்கு உரிமையில்லை.

பொய்யாக முதல் அறிக்கை வேண்டும் என்றே குற்றச்சம்பவம் எதுவும் நடக்காமல் சம்பவம் நடந்ததாக புனைத்து பதிவு செய்யப்பட்டால் அதற்கு காவல்துறை அதிகாரியும் உடந்தையாக இருந்தால் புகார்தாரர் மற்றும் காவல்துறை அதிகாரி மீது குற்ற நடவடிக்கை தொடரமுடியும்.

**குற்றமுறையீடு (Private Complaint) 200 CrPc:** காவல் நிலையத்தில் மட்டுமே ஒரு குற்ற வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்க முடியும் என்பதல்ல, நீதிமன்றங்களிலும் புகார் கொடுக்கலாம். சில குற்றங்களை பொருத்து நீதிமன்றத்தில் மட்டுமே புகார் கொடுக்க முடியும் என்று சட்டம் தெளிவாக இருக்கும் போது நீதிமன்றத்தில் மட்டுமே புகார் கொடுக்க முடியும்.

உதாரணமாக காசோலை மோசடி வழக்கை மாற்று முறை ஆவணச் சட்டத்தின் படி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முடியாது. அதேபோன்று, அவதூறு செய்துவிட்டதாக குற்றவழக்கு நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்ய முடியும்.

நீதிமன்றங்களில் மட்டுமே தாக்கல் செய்யப்படும் புகார்களை காவல்நிலையங்களில் தாக்கல் செய்யமுடியாது. ஆனால் காவல் நிலையங்களில் கொடுக்கப்படும் புகார்களை காவல்துறையினர் ஏற்க மறுக்கும் பொழுது நீதிமன்றத்தில் புகார் கொடுக்க முடியும்.

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 200 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் கொடுப்பதை வரையறுக்கிறது. நீதிமன்றத்தில் புகார் கொடுக்கும் போது நீதிமன்றம் அந்த புகாரை காவல் துறை விசாரணைக்கு உத்தரவிடுவது உகந்தது என கருதினால் குற்றம் நடந்ததாக கருதப்படும் எல்லைக்குட்பட்ட காவல்நிலைய அதிகாரிக்கு புலன் விசாரணைக்கு உத்தரவிடலாம். CrPc56(3).காவல் துறை அதிகாரி நீதிமன்றத்தால் புலன் விசாரணைக்கு உத்தரவிடும் புகார்களின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தில் குற்றவழக்கு யார் வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம். வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என கட்டாயம் இல்லை. புகார் கொடுப்பவர் நேரிடையாக நீதிமன்றத்தில் ஆஜராகலாம். நீதிமன்றத்தில் குற்றவழக்கு தாக்கல் செய்வது என்பது ஒரு திறமையான கலை. சட்டமும் சங்கதிகளும் சரியாக பொருந்தக்கூடியதாக புகார் தயாரிக்கப்பட வேண்டும். இதற்கு திறமையான வழக்கறிஞரின் உதவி கட்டாயம் தேவை.

நன்றி: தினமணி



# தொழிலை டிஜிட்டலில் மாற்றினால் போதுமா? ...

காற்று புகா இடத்திலும் காலம் நம்மை புகுத்தி விடும் என்பது தான் தற்போதைய டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சி. அதற்கேற்ப மாறுவது தான் காலம் நமக்கு காட்டும் பாதை. சரி நாம் மாறி விட்டோம்... மாறிவிட்டால் போதுமா?... வெற்றி பெற்று விடமுடியுமா?...

டிஜிட்டல் என்பது குறுகிய காலத்தில் மாறிக்கொண்டே இருக்கக் கூடியது. உதாரணமாக இன்று நம் அனைவரின் அலைபேசியில் வரும் குறுஞ்செய்தி ஒரு காலத்தில் தந்தி வடிவில் வீடு தேடி வரும். செய்தி வந்து சேருவதற்கு ஓரிரு நாள் வரை ஆகும். ஆனால் இன்றோ அடுத்த வினாடிக்குள் நமக்கு கிடைத்துவிடுகிறது. அதிலும் முதலில் எழுத்து வடிவில் மட்டுமே பெற முடிந்த குறுஞ்செய்தி, பின்னர், குறுகிய காலத்தில் புகைப்படம், வீடியோ என அனைத்தையும் சில விநாடிகளில் அனுப்பும் அளவிற்கு டிஜிட்டல் மாற்றம் அடைந்தது. தந்தி சேவையானது 175 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்தது. ஆனால் டிஜிட்டல் வளர்ச்சியானது நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் போல் ஏற்றம் கண்டு வருகிறது. அதற்கேற்ப நாம் அதில் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.



அதுபோல, கணிணி, ஸ்மார்ட் போன்கள் மூலமாக ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், டிஜிட்டல் பேமன்ட்முறை, டேலி இ.ஆர்.பி. போன்ற சிற்சில டிஜிட்டல் தளத்தில் இணைந்து கொண்டால் தொழில் செய்யும் நாம் டிஜிட்டல் முறையில் நாம் மாறிவிட்டோம் என்று நின்று விடக்கூடாது. டிஜிட்டலில், க்ளவுட் முறை, மிஷின் லர்னிங், ஆர்சிஃபிஷியல் இண்டெலிஜென்ஸ், வெர்ச்சுவல் ரியாலிட்டி, ஆகுமெண்ட் ரியாலிட்டி என்று உருவெடுத்துக்கொண்டே செல்கிறது. நம் தொழிலுக்குத் தகுந்த டிஜிட்டல் முறையை கையாண்டு அதில் முன்னோடியாக இயங்கிக்கொண்டே இருத்தல் நம் தொழிலை இந்த டிஜிட்டல் யுகத்தில் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

டிஜிட்டல் என்பது தொழிலில் இருந்தால் நல்லது என்ற கட்டத்தை தாண்டி அது இல்லையென்றால் தொழில் நடத்தவே முடியாது என்ற கட்டத்தில் இன்று வாழ்கிறோம்.

டிஜிட்டல் எனும் சக்கரத்தின் வேகம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை அதிகரித்துவிட்டது. இதன் காரணமாக போட்டியாளர்கள் பெருகிவிட, தொழிலில் அழுத்தம் ஏற்படுகிறது. வேகமாகச் சொல்வது கூட மெதுவாகத் தெரிகிறது. செயல் செய்வதற்கு முடிவெடுக்க வேண்டிய நேரம் முக்கால்வாசி சுருங்கிவிட்டது. ஒரு மாதத்தில் எடுக்க வேண்டிய முடிவுகளை ஒரு வாரத்தில் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்து வருகிறோம். முடிவெடுப்பதை விவேகமாகவும், விரைவாகவும் செய்தால் மட்டுமே காலத்தின் வேகத்திற்கு ஏற்ப நம் தொழிலில் ஈடுகொடுத்து பயணிக்க முடியும். ஆகவே தான் நாம் டிஜிட்டல் முறையில் மாறிவிட்டோம் என்று கருதாமல் அதன் வேகத்திற்கு பயணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். டிஜிட்டல் விஷயத்தில் அப்டேட்டடாக இருங்கள் என்பதே இந்த கட்டுரையின் நோக்கம்.

இன்றைய அவசரடி தொழில் யுகத்தில் ஒரே இடத்தில் நின்றிருந்தால் உலகம் உங்கள் மீது ஏறி நசுக்கிவிட்டுப் போய்க்கொண்டிருக்கும் என்றார் **பில் கேட்ஸ்.**

“உங்கள் லாப அளவு தான் என் வாய்ப்பு'' என்கிறார் அமேசான் உரிமையாளர் **ஜெஃப் போஸோஸ்.** உங்கள் தொழிலை டிஜிட்டலாக்காமல் நடத்தும் போது அமேசான் தன் பொருட்களை தள்ளுபடி விலையில் விற்று உங்கள் லாபத்தை கபளீகரம் செய்கிறது. இதற்கு அதன் டிஜிட்டல் சக்தி பெருந்துணையாக இருக்கிறது. ஆக, அமேசான் போன்ற நிறுவனங்கள் விலை குறைத்து உங்கள் வயிற்றில் அடிக்கவில்லை. டிஜிட்டல் தொழிற்நுட்பத்தை பயன்படுத்தாத அல்லது குறைந்த அளவில் அப்டேட் செய்து தொழில் நடத்துவதால் இது போன்ற பெரிய நிறுவனங்கள் தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறது அவ்வளவே.

இன்று பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் டிஜிட்டல் முறையில் மாறிவிட்டாலும், அதில் முன்னோடியாக, அப்டேட்டடாக பயணம் செய்வது அவசியம். டிஜிட்டலில் விழிப்புணர்வுடன் செயல்படுங்கள்.

- இதழ் குழு


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# ஸ்ரீ வேங்கட ஸூரி ஸ்வாமிகள்

– ஸௌராஷ்டிர மஹான்கள் மற்றும் ஆன்மீக ஆன்றோர்களின் தரிஸனம் புத்தகத்திலிருந்து
(நூல் உதவி: ஈரோடு திரு. K.R. கிருஷ்ணமாச்சாரி)

ஸ்ரீ வேங்கட ஸூரி சுவாமிகள் தஞ்சையைச் சேர்ந்த அய்யம்பேட்டை ராமச்சந்திரபுரத்தில் புரோஹித குடும்பத்தில் நாராயணஸர்மா - ரெங்கநாயகி அம்மாளின் மகனாக 1817-ம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் வேங்கடசுப்பு.

தகப்பனாருடன் புரோகிதத் தொழிலில் ஈடுபட்ட இவர் தமிழ் மற்றும் தெலுங்கு மொழி கற்றுத்தரும் ஆசரியராகவும் பணியாற்றி வந்தார். அதோடு சங்கீதமும் கற்றுத் தரலானார். இவர் ஸ்ரீமத் வேங்கடரமண பாகவதரின் சிஷ்யரானார். இவர் ஓர் அரிய பன்மொழி வல்லுநர்.

இவரது புலமையை அறிந்த தஞ்சை மராட்டிய மன்னர் சிவாஜி இவரை அரச மரியாதையுடன் வரவேற்றுப் பரிசுகள் மற்றும் மான்யங்கள் வழங்கி அரசவைப் புலவர்களுடன் இவரையும் சரஸ்வதி மஹாலில் சேர்த்துக் கொண்டார். இவர் இருபத்தைந்து ஆண்டு காலம் மன்னர் அவையில் புலவராய் இருந்து ஸௌராஷ்ட்ரம், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி முதலான மொழிகளில் கவிகள் பல பாடியுள்ளார். தஞ்சை மன்னர் புதல்வியின் திருமணத்தின் போது ஸௌராஷ்ட்ர மொழியில் மங்களாஷ்டகம் பாடியுள்ளார்.

பன்மொழிப் புலமை காரணமாக தஞ்சை மன்னரால் **'ஸூரி'** என்ற பட்டம் பெற்றார். தஞ்சை மராட்டிய மன்னரின் ஸமஸ்தான வித்வானாக விளங்கினார்.

மன்னராட்சி மறைந்த பின்னர் இவர் மதுரைக்கு வந்து ஜுட்டி வகையரா, தெற்கு மாசி வீதி திரௌபதி அம்மன் கோவிலில் தங்கியிருந்து பாடசாலை ஒன்றை நிறுவி சௌராஷ்ட்ர மொழி பயிற்றுவித்து வந்தார். இவர் சௌராஷ்ட்ர மக்கள் வாழும் ஊர்களுக்கெல்லாம் சென்று கதாகாலக்ஷேபம் செய்து வந்தார். பின்னர் மீண்டும் மதுரைக்கே வந்து ஸௌராஷ்ட்ர சங்கீத ராமாயண காவியத்தை இயற்றி அருளினார். இது 598 சுலோகங்களும், 347 கீர்த்தனைகளும் ஆறு காண்டமாகக் கொண்டது. ராமாயண காவியம்தனைத் தாய்மொழியில் யாத்து, ஸௌராஷ்ட்ர மொழிக்கு உயர்தனிச் செம்மொழி அந்தஸ்து அளித்த மகான். இவர் ஸ்ரீ தியாகராஜரின் தெலுங்கு **நௌகா** சரித்திர காவியத்தைச் சமஸ்கிருத மொழியில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்து உள்ளார். இவர் ஒரு புரோகிதமேதை. தெலுங்கு மொழியில் கதா காலக்ஷேபம் செய்து பெரும் புகழ் பெற்றவர்.

# நம் ஸௌராஷ்ட்ர சமூக இளைஞர்கள் உருவாக்கியுள்ள புதிய முயற்சி

ஏழ்மையை எப்படி ஒழிப்பாய்? அனைவருக்கும் சமமான வாழ்க்கையை எப்படி உருவாக்க முடியும்?. இதுவரைக்கும் பிச்சையெடுக்குறவனே இல்லாத ஊர பாக்க முடியுமா?...

நாங்க அதுக்கான ஒரு தீர்வாகத்தான் இங்க உங்க முன்னாடி ஒன்னு கொண்டு வந்திருக்கோம். எங்களுக்கு உங்க டொனேஷன் வேண்டாம். எங்களுக்கு உங்க சப்போர்ட் இருந்தாலே போதும்.

இப்ப எல்லாமே ஆன்லைன் மயமாயிட்டு வருது மத்தவங்க உழைப்பை கூட ஐடியாங்கற பேர்ல கொஞ்சம் பணம் அந்த நிறுனத்துக்கு போகுது. உங்க வீட்டுக்கே எல்லாமே தேடியும் வருது. ஆன்லைன் பண பரிவர்த்தனை, ரீசார்ஜ், பஸ் புக்கிங்னு நிறைய ஆன்லைன் இருக்கு. அந்த நிறுவனத்துக்கு அது லாபமா போகுது.

எங்களோட முயற்சியும் அதே மாதிரி எல்லா ஆன்லைன் பிஸ்னஸ் இந்த **www.paytopoor.com** வெப்சைட் மூலமா கொண்டு வந்து அதுல வர்ற செலவு போக மிச்சமாகுற பணத்தை எல்லா நம்ம கஷ்டப்படுறவங்களுக்கும், உதவி தேவ பட்றவங்களுக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் சரியாய் போகுறதுக்கு நாங்க யோசிச்சி வேலையும் செஞ்சிட்டு இருக்கோம். இதனால உங்க அன்றாட தேவைகள் எல்லாமே எங்க மூலமா வரும்போது கஷ்டப்படுறவங்க எண்ணிக்கை கொறஞ்சு எல்லாரும் நிம்மதியான வாழ்க்கையை அடையளாம்.

இந்த வெப்சைட் மூலமா ஏழை பணக்காரன் பாகுபாடின்றி எல்லாரும் அவங்க தினசரி வாங்குற பொருட்கள் மூலமா அந்த லாபம் உதவியா போகும். எங்களோட முயற்சிக்கு இப்போ உங்களோட உதவியும் தேவைப்படுது. நாங்க அடுத்த கட்டத்துக்கு போக நீங்க எங்களுக்கு நிதி உதவி பண்ணுங்க. உங்கள் பணம் அடுத்த தலைமுறையை மாற்றும். ஒரு சரித்திரம் ஆகும். மீண்டும் உங்கள் நிதி தேவைப்பட்டால் உங்களுக்கு ஓராண்டில் திருப்பி குடுத்துடறோம்.

மேலும் விபரங்களுக்கு எங்க வெப்சைட் போங்க (www.paytopoor.com) ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம். நன்றி. தொடர்புக்கு: 90424 24114

**AWARDS**
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award
**ROYAL ROMANTIC**
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்

JSW Steel






## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...




## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## நியூ தாசு மெட்டல்ஸ்
## NEW DASU METALS

DASU SINCE 1993

25

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM), MADURAI - 09)

0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



## Plan & Built

Civil Construction & Interior

DTCP APPROVED LAYOUT

ம.வ(ம) உ.ஊ.து.இ.எண்: 599/2018

## GOLDEN CITY

இராமு சீதா பாலிடெக்னிக் எதிரில், காரியாபட்டி.

12.5 லட்சம் முதல் தனித் தனி வீடுகள்

2.15 லட்சம் முதல் வில்லா பிளாட்டுகள்

Contact : 8754660660, 9745520920, 9962295452

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Office : 163-A2, First Floor, Thamgam Nagar, Ganesh Theater Signal, Kamarajar Salai, Madurai - 625 009.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.02.2021 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775

FOLLOW US ON

visit :
www.onvgprint.com

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

**onVGPrint**

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

**VALE SPECIALTY ORTHO CLINIC**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.

Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



**Dr. K.N. SUBRAMANIAN** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

**கைத்தறியில் ஓர் புதுமை**

**Electronic Jacquard**



**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**

- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

**SRE CORPORATION**

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 46064, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org